இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 30-12-2024

# ‘பொள்ளாச்சி’ பழனிசாமிக்கு....

**எடப்பாடி பழனிசாமி, தான் ஒரு ‘பொள்ளாச்சி’ பழனிசாமி என்பதை மறந்து அறிக்கைகள் விடுவதும், போராட்டம் நடத்துவதும், பேட்டிகளில் கனைப்பதுமாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.**

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டார். ஒரே நாளில் இதன் உண்மைக் குற்றவாளி ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டார். இதில் என்ன குறை கண்டார் பழனிசாமி?

குற்றத்தை மறைத்திருந்தாலும், குற்றவாளியைக் கைது செய்யாமல் விட்டிருந்தாலும் பழனிசாமி குறை சொல்லலாம். உடனடியாக குற்றவாளி கைது செய்யப்படுகிறார். குற்றச் சம்பவத்தை மறைக்கும் செயல் எங்குமே நடக்கவில்லையே!

**பாதிக்கப்பட்ட பெண் புகார் அளித்ததும், உடனடியாக எப்.ஐ.ஆர். எனப்படும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அவருக்கும் அந்த அறிக்கை தரப்பட்டது. நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. ஞானசேகரன் என்பவருக்கு இதில் தொடர்பு இருப்பதற்கான தடயங்கள் இருப்பதைக் கண்டுபிடித்ததும் அந்த நபர் கைது செய்யப்பட்டார். இவை அனைத்தும் 24 மணி நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.**

அண்ணா பல்கலைக் கழகத்தில் 70 கேமராக்கள் உள்ளது. அதில் 56 கேமராக்கள் இயங்குகிறது. அதில் பதிவான காட்சிகளை வைத்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வீடியோ காலில் ஞானசேகரனை காவல் துறை காட்டி உறுதி செய்து விட்டது. அதன்பிறகும் பழனிசாமி, ‘கிரிமினல் சைட்’ லாயர் போல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்.

“யாரோ ஒருவரை சார் என்று சொல்லி இருக்கிறார் குற்றவாளி. யார் அந்த சார்?” என்று கேட்கிறார் பழனிசாமி. அதற்கும் சென்னை மாநகர ஆணையர்பதில்அளித்துவிட்டார். “இதுவரைநடைபெற்றபுலனாய்வின்படி ஞானசேகரன் ஒருவர்தான் குற்றவாளி. சம்பவம் நடந்தபோது ஞானசேகரன் ஒருவருடன் கைப்பேசி மூலமாக பேசியதாக தகவல் பரவுகிறது. ஆனால் அது உண்மை அல்ல. சம்பவம் நடந்த போது கைப்பேசியை ‘ஏரோபிளேன் மோடில்’ ஞானசேகரன் வைத்துள்ளார். அவர் மாணவியை மிரட்டுவதற்கும், பயமுறுத்துவதற்கும் பொய்யாக கைப்பேசி மூலம் ஒருவரிடம் பேசுவதுபோல் நாடகமாடியுள்ளார்” என்று விளக்கம் அளித்துள்ளார் ஆணையர்.

முதல் தகவல் அறிக்கை தவறுதலாக வெளியாகி விட்டது. இது தொடர்பாக தனியாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு செய்தியையும் நுணுக்கமாக ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது தமிழ்நாடு காவல் துறை. ஆனால் பழனிசாமி இதில் அரசியல் லாபம் தேடுவதற்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

**இந்த ‘யோக்கிய சிகாமணி’ ஆட்சியில் நடைபெற்ற பொள்ளாச்சி சம்பவத்தில் என்ன செய்தார்? எப்படி நடந்து கொண்டார்?**

பொள்ளாச்சியில் பாதிக்கப்பட்ட ஒரு பெண், இந்தச் சம்பவம் குறித்து தனது அண்ணனிடம் சொல்கிறார். அவர் பிரச்சினைக்குரிய நபர்கள் நான்கு பேரை அடையாளம் கண்டு அடித்துவிடுகிறார். இந்த நான்கு பேரையும் அவரே பிடித்துக் கொண்டு வந்து பொள்ளாச்சி டவுன் காவல் நிலையத்திலும் ஒப்படைக்கிறார். வீடியோக்கள், செல்போன்களையும் தருகிறார். இதனைப் பெற்றுக்கொண்ட பழனிசாமி ஆட்சி போலீசார், வழக்கு பதியவில்லை. அனைவரையும் விடுவித்து விட்டனர். இந்தப் புகாரை அப்படியே ‘குற்ற’ தரப்புக்கு கொடுத்து விடுகிறார்கள். இந்த இடத்தில் அ.தி.மு.க. பிரமுகர் பார் நாகராஜன் என்பவர் வருகிறார். அவர், பாதிக்கப்பட்ட பெண்ணின் அண்ணனை தாக்குகிறார்.

இதன்பிறகு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை வெளியிட்டார். தி.மு.க. மகளிரணிச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் பொள்ளாச்சியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மூன்று பேரைக் கைது செய்து கணக்குக் காட்டி முடிக்கப் பார்த்தார் பழனிசாமி. முக்கியமான குற்றவாளியான திருநாவுக்கரசுவைக் கைது செய்யவில்லை. இதனை சுட்டிக்காட்டி தி.மு.க. தலைவர் அறிக்கை வெளியிட்டார்கள். இது பற்றி முதலமைச்சர் பழனிசாமியிடம் கேட்டபோது, ‘அ.தி.மு.க.வினருக்கு இதில் தொடர்பு இருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருந்தால் கொடுங்கள்’ என்று கேட்டார்.

**இந்த குற்றத்தில் தொடர்புடையவர்களுக்கும் அ.தி.மு.க. பிரமுகர்களுக்குமான தொடர்பை ‘நக்கீரன்’ இதழ் வெளியிட்டது. நக்கீரன் நிருபரை, எடப்பாடி பழனிசாமி பேரைச் சொல்லியும், அன்றைய அமைச்சர் வேலுமணி பேரைச் சொல்லியும்தான் மிரட்டினார்கள். இதனை அப்போதே நக்கீரன் இதழ் வெளியிட்டுள்ளது. விசாரணை என்ற பெயரால் தடயங்களை மறைத்தது பழனிசாமி அரசு. பின்னர் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது.**

**பொள்ளாச்சி சம்பவமே அ.தி.மு.க. பிரமுகர்களால் தான் நடந்தப்பட்டது என்பதை சி.பி.ஐ. உறுதி செய்தது. அருளானந்தம், பாபு, கரோன்பால் ஆகிய மூவர் கைது செய்யப்பட்டார்கள். இந்த மூவரும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். அருளானந்தம் என்பவர் அ.தி.மு.க. மாணவரணி செயலாளராக இருக்கிறார். அன்றைய அமைச்சர் வேலுமணியின் கைத்தடியாக வலம் வந்துள்ளார். வேலுமணியுடன் பல்வேறு விழாக்களில் பங்கெடுத்துள்ளார். அதேபோல், பொள்ளாச்சி ஜெயராமனுடன் இருக்கிறார். பல்வேறு நிகழ்ச்சிகளில் ஜெயராமனுடன் இருந்துள்ளார். ஜெயராமன் பேட்டி கொடுக்கும் போதெல்லாம் அவரோடு அருளானந்தம் உள்ளார். அ.தி.மு.க.வின் சுவரொட்டிகளில் அருளானந்தம் படம் இடம்பெற்றுள்ளது. அதேபோல் பாபு, கரோன்பால் ஆகிய இருவரும் பொள்ளாச்சி ஆச்சிடிபட்டி ஊராட்சித் தலைவரும் அ.தி.மு.க. பிரமுகருமான ரெங்கநாதனுடன் நெருக்கமாக இருந்துள்ளார்கள். இவர்கள் படங்களும் சமூக வலைத்தளங்களில் பரவியது. இப்படி கைதான மூவரும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்.**

இவர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இப்படி ஒரு சம்பவமே நடக்காதது போல நாடகம் ஆடியது அன்றைய அ.தி.மு.க. அரசு. சம்பவம் வெளியே தெரிந்ததும், பார் நாகராஜனை கட்சியை விட்டு நீக்கினார் பழனிசாமி. கட்சியை விட்டு நீக்கிய மறுநாளே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குச் சென்று துணிச்சலாக பேட்டி கொடுத்தார் பார் நாகராஜன்.

**இதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. வெட்கமாக இல்லையா?**

இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்றியமைத்த மாபெரும் தலைவர்! முன்னாள் பிரதமர்

# டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு நினைவகம் கட்டுவதற்குரிய இடத்தில் இறுதிச் சடங்கிற்கு பா.ஜ.க. அரசு மறுத்திருப்பது ஆணவச் செயல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, டிச. 29-**

**முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு நினைவகம் கட்டுவதற்குரிய இடத்தில் அவரது இறுதிச் சடங்குகளைச் செய்ய பா.ஜ.க. அரசு அனுமதி மறுத்திருப்பது ஆணவச் செயல் மட்டுமல்ல மன்மோகன் சிங்கின் தொண்டையும், அவரது சமூகத்தையும் அவமதிக்கும் செயலாகும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் குடும்பத்தார் அவருக்கு நினைவகம் கட்டுவதற்குரிய இடத்தில் அவரது இறுதிச் சடங்குகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரியதை பா.ஜ.க. அரசு நிராகரித்துள்ளது. இது அவரது உயர்ந்த தொண்டையும், அவரது சீக்கிய சமூகத்தையும் நேரடியாகவே அவமதிக்கும் செயலாகும்.

அவரது குடும்பத்தார் வைத்த கோரிக்கையை மறுத்து, இரு முறை பிரதமராக இருந்த தலைவரின் இறுதிச் சடங்கு நிகழ்வைச் சாதாரணமாக நிகம்போத் காட்டில் வைத்து நடத்தியிருப்பது ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஆணவத்தையும், பாரபட்சத்தையும் காட்டுகிறது. இது, அவரது பெரும் பங்களிப்புகளை மக்களின் நினைவில் இருந்து அகற்ற முனையும் அப்பட்டமான முயற்சியாகும்.

டாக்டர் மன்மோகன் சிங் அவர்களது தலைமை இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்றியமைத்துக் கோடிக்கணக்கான மக்களை வறுமையின் பிடியில் இருந்து மீட்டெடுத்தது. இத்தகைய உயர்ந்த தலைவரை அவமதிப்பது என்பது இந்தியாவின் முன்னேற்றத் தையே அவமதிப்பதற்குச் சமமாகும். பெருந்தலைவர்களை அவமதிக்கும் கறை வரலாற்றில் இருந்து என்றும் மறையாது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில்

# மண்டல தி.மு.க. மருத்துவ அணி சார்பில் சமூக நீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டம்!

## மண்டலப் பொறுப்பாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அறிக்கை!

*திருவண்ணாமலை, டிச.30-*

*திருவண்ணாமலை மண்டல தி.மு.க. மருத்துவ அணி சார்பில், திருவண்ணாமலையில் சமூக நீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டம் நடைபெறவுள்ளது. பாசறைக் கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், சமூக நீதி காவலர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.*

*இதுகுறித்துதிருவண்ணாமலை மண்டல தி.மு.க. மருத்துவ அணி பொறுப்பாளரும், மாநில மருத்துவ அணி துணைத் தலைவருமான டாக்டர் எ.வ.வே.கம்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*“திராவிட மாடல் ஆட்சியின் மையக் கொள்கை என்பது மனிதநேயமும், சமூக நீதியும்தான். அனைத்து இடங்களிலும்சமூகநீதியை நிலைநாட்டி வருகிறோம். வகுப்புரிமை எனப்படும் இடஒதுக்கீடு அனைவருக்கும் சமவிகிதத்தில் தரப்பட்டு வருகிறது.*

*எண்ணற்ற சமூகநீதி திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டை வளப்படுத்தி வருகிறோம். சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கக் கூடிய இயக்கம்தான் தி.மு.க.*

*வளர்ச்சி என்பது பொருளாதாரவளர்ச்சியாக மட்டுமில்லாமல் சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஆகியஐந்தும்ஒருசேரவளர வேண்டும்.*

*இந்தியாவின் பிற மாநிலங்களை ஆளும் அரசுகள் தமிழகத்தின் திராவிட மாடல் கொள்கையையும் கோட்பாடுகளையும்அறிவதில் ஆர்வமாக உள்ளனர். அதை தங்கள் மாநிலத்தில் நடைமுறைப்படுத்துவதில் துடிப்புடன் உள்ளனர்.”*

*இவ்வாறு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக நீதியில் கழகத்தின் பங்கு குறித்து எப்போதும் வெளிப்படுத்தி வருகிறார்.*

*கழகத்தின் இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சமூக நீதிக்கு எதிரான சனாதனத்தை எதிர்ப்பதில் எப்போதும் உறுதியாக உள்ளார்.*

*இதனைத் தொடர்ந்து திருவண்ணாமலைமண்டல தி.மு.க. மருத்துவ அணி சார்பில், 04.01.2025 சனிக்கிழமை அன்று, திருவண்ணா மலை அருணை மருத்துவக்கல்லூரி அரங்கத்தில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டம் நடைபெறவுள்ளது.*

*பாசறைக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலத்துறைஅமைச்சர்சி.வி.கணேசன், திராவிட இயக்கதமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் மற்றும் சமூக நீதிக் காவலர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழகசெயலாளர்கள், நிர்வாகிகள்மற்றும்சிறப்புஅழைப்பாளர்கள் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்கள்.*

*எனவே, திருவண்ணாமலை மண்டலத்திற்குட்பட்ட கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, திருவண்ணாமலைவடக்கு, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும்தொகுதிஅமைப்பாளர்கள், நிர்வாகிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக வல்லுநர்கள், மருந்தாளுநர்கள், அவசர ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் மருத்துவ துறையைச் சார்ந்த அனைவரும் கலந்து கொண்டுசிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு டாக்டர் எ.வ.வே.கம்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# மானாகுடியில் மஞ்சுவிரட்டு ஜெயராமன் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, டிச. 30 -*

*சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகம் மானாகுடி கிளைக் கழகம் மற்றும் இளைஞர்கள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் , சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பிறந்த நாளை முன்னிட்டு முப்பெரும் விழா வாக மானாகுடி திடலில் வடமாடு மஞ்சுவிரட்டு நடைபெற்றது. வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியினை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம். ஜெயராமன் துவக்கி வைத்தார்.*

*சிவகங்கை தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், மேலூர் உட்பட 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இருந்து மாடுகள் பங்கேற்றது . மானாகுடி கிளைகழக செயலாளர் ஐயப்பன் ஏற்பாட்டின் பேரில் நிர்வாகிகள் செந்தில்குமார், குட்டி புலி, மோகன், மற்றும் விழாக் குழுவினர் வடமாடு மஞ்சுவிரட்டு ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.*

*இந்த நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மனோகரன், அழகு சுந்தரம், குமார், முத்துக்குமார், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திருமதி திலகவதிகண்ணன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .*

*சிவகங்கை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து ஏராளமான இளைஞர்கள் , பெண்கள் கலந்து கொண்டார்கள். மாடு பிடி வீரர்களுக்கு வெள்ளிக் காசு, பரிசு பொருட்களை ஒன்றியச் செயலாளர் எம். ஜெயராமன் வழங்கினார்.*

48வது சென்னை புத்தகக் காட்சியில் திராவிட இயக்க

# ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி!

## வே.மதிமாறன் உடனான கலந்துரையாடலில் வாசகர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்!






சென்னை, டிச. 30 -

சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன் உடனான கலந்துரையாடலில், வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

**துணை முதலமைச்சர்**

சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் 27.12.2024 அன்று 48-வது சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கிவைத்த மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வாசகர்களின் வாசிப்பு அனுபவத்தை ஊக்குவிக்கும் விதமாக, தினம்தோறும் திராவிட இயக்க எழுத்தாளுமையை அழைத்து வந்து, வாசகர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும் நிகழ்ச்சிக்கு முத்தமிழறிஞர் பதிப்பகம் ஏற்பாடு செய்துள்ளது.

**இளம் பேச்சாளர்கள்**

அந்த வகையில், முதல் நாளாக நேற்று முன்தினம் (28.12.2024) திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன் முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கிற்கு வருகை தந்தார். அதனையொட்டி, இளைஞர் அணியைச் சார்ந்தவர்களும், வாசகர்களும், தி.மு.கழக இளைஞர் அணியின் ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டி மூலம், இளம் பேச்சாளர்களாக அறிமுகம் ஆகியிருக்கும் சிலரும் அரங்கிற்கு வருகை தந்திருந்தனர்.

அவர்களுடன் கலந்துரையாடிய வே.மதிமாறன், வாசிப்பு ஏன் அவசியம் என்பது குறித்தும் வாசிப்பின் ஊடாக, திராவிட இயக்க கருத்தியலை உள்வாங்குவது எப்படி என்பது குறித்தும் எடுத்துரைத்தார்.

**எதை வாசிக்க வேண்டும்?**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது எழுத்துகளும், பேச்சுகளும் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம், அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தும் விளக்கியதுடன், எதை வாசிக்க வேண்டும்? எப்படி வாசிக்க வேண்டும், எதற்காக வாசிக்க வேண்டும் என்றும் அவர் ஆற்றிய சிறு உரை வாசகர்களை ஈர்த்தது.

**ஆரோக்கியமான உரையாடல்**

குறிப்பாக, கலைஞர் மீது கட்டமைக்கப்பட்ட அவதூறுகள் குறித்து, வாசகர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, அவர் அளித்த பதில், கடந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றையும், கலைஞரின் பங்களிப்பையும், தி.மு.க.-வின் கடந்தகால செயல்பாடுகளையும் திரும்பிப் பார்க்க வைக்கும் விதமாக இருந்தது. ஆரோக்கியமான உரையாடலாக இருந்தது என்ற மனநிறைவோடு வாசகர்கள் சென்றனர்.

வாசகர்களின் வாசிப்பு அனுபவத்தை ஊக்குவிக்கும் விதமாக, தினம்தோறும் திராவிட இயக்க எழுத்தாளுமையுடனான, கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை ) மாலை 6.30 மணிக்கு, திராவிட இயக்க ஆய்வாளர் தமிழ் காமராசன் பங்கேற்கிறார்.